# திருமந்திரத்தில் மெய்யியல் சிந்தனைகள்

முனைவர் நா. மாலதி
உதவிப்பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர் -10.
nagarajanmalathi47@gmail.com

37

உலகில் வாழும் மனிதர்களுக்கு ஆன்மீகம் இன்றியமையாததாகும். ஆன்மீகம் என்ற சொல் ஆன்மாவைச் அறியமுற்படுதலைக் குறிக்கும். முற்பிறவியில் செய்த வினைகளால் மாசு படிந்துள்ள உயிர்களின் இப்பிறவியானது ஆன்மீக வழியில் படிப்படியாக மேண்மையடைகிறது. ஒவ்வொரு சோதனைகளையும் சந்தித்து வழிப்பாட்டைக் கடைப்பிடிக்கும்போது பாவச்சுமைகள் குறைந்து, துன்பம் விலகி அறிவு மேம்பட்டும் பற்றுகள் குறைந்தும், இறைவனிடம் சரணடைவதன் மூலம் ஆன்மாவை இறைவனிடத்து செலுத்துதலே ஆன்மீக ஞானமாகும்.

ஆன்மீகத்திற்கான அடிப்படைகள் அன்புடைமை, அறம் செய்தல், நிலையாமை உணர்தல், ஒழுக்கம் காத்தல், மெய்யறிவை உணர்தல், இழிவான செயல்களைச் செய்யாமை ஆகியன ஆன்மீகத்திறகான அடிப்படைகள் ஆகும். இத்தகையச் சிறப்புகளை உள்ளடக்கிய ஆன்மீகக் கருத்துக்களின் சிறப்புகளை திருமந்திரத்தின் மூலம் அறிய
முயலுவதாக இக்கட்டுரை அமையும். இதில் ஆன்மாவின் தன்மை, அவை பெறும் இன்னல்கள், அவ்வின்னல்களை (தடையை) இறைவன் துணைக்கொண்டு வெல்லும் வழிவகைகளைத் தொகுத்துக் கூறுவதாக அமையும் என்பது வெறும் வெற்றுச் சொல் அன்று அது ஆன்மாவின் பன்முகத் தன்மையை மற்றும் இறைவனுக்கும் ஆன்விற்குமான தொடர்பு பற்றிக் கூறவதாகும்.

**திறவுச்சொற்கள்**

திருமந்திரம்,திருமூலர்,மெய்யியல்,குரு,ஈகை,ஞானம்,தவம்,ஆன்மா,நிலையாமை

**திருமந்திரம்**

“ஒன்றே குலமும், ஒருவனே தேவன்..."என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகள் திருமந்திரத்தில் அழகாக விளக்கியவர் திருமூலர். ஆன்மிகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை. சித்தர்களில் முதன்மையானவரான திருமூலரின் திருமந்திர மாலை என்னும் நூல், திருமந்திரம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இந்நூல் சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது. சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த சைவசமயஞ் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் என்று கூறலாம். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளது. ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒரு ‘தந்திரம்’ எனக் குறிக்கப்படுகின்றது. திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது. உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொது

நூலாக அமைந்துள்ளது. இறைவன்,ஆன்மா,உலகம்,யோகம்,தவம்,பிரபஞ்சம்,உடல்,அறிவியல், மெய்யியல் போன்ற பல்வேறு கருத்துக்கள் பற்றி திருமூலர் பாடல் இயற்றியுள்ளார். அவை இன்றும் பின்பற்றக்கூடியதாக உள்ளன. அவர் கூறிய கருத்துக்களை மெய்யியல் அடிப்படையில் விளக்குவதாக இக்கட்டுரை அமையும்.

**அன்புடைமை**

அன்பின் சிறப்பைத் திருமூலர் திருமந்திரத்தில் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார். ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படை இறைவனை அடைவது. அதற்கு துணையாக அமைவது அன்பு. உலக உயிர்களிடத்தில் தன்னலம் கருதாமல் அன்பினைச் செலுத்துதல் வேண்டும். இவ்வுயிர் இரக்க அன்பே சிறிது சிறிதாக உயர்ந்து இறைவனிடத்தில் கொள்ளும் அன்பாக அவை மாறும். பின்னர் இவ்வன்பு இறைவனிடம் இன்புற்றிருக்கும் நிலையைத் தரும். ஏனெனில் அன்புதான் சிவம், சிவம்தான் அன்பு. இத்தத்துவமே அன்பே வடிவாய் மாறுங்காலத்து உரைப்படும். இதனை திருமூலர்,

**அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரு மறிகிலார்**
**அன்பே சிவமாவதாரு மறிந்த பின்**
**அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே**[1]

அன்பையும் அருளையும் கொடுக்கும் சிவபெருமான் இவற்றிற்கு மூலமாக விளங்கும் பொறுமையைப் பொருளாக விரும்புபவன். எனவே, ஆன்மீகத்தில் திளைக்க விரும்புபவர்கள் முக்குற்றங்களை நீக்கி(காமம்,வெகுளி,மயக்கம்) உள்ளத்தில் அன்பும் அருளும் தோன்றுவதற்குப் பொறுமை மிக அவசியம். உள்ளத்தைப் பொறுமையுடன் இருக்கப் பழகிப் பக்குவப்படுத்தினால் ஆன்மீக நெறி எளிதில் கிட்டும் என்பதை,

**மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்திப்**
**பொய்மையாங் களையை வாழ்ங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்**
**தன்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்**
**செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையுமன்றே**[2]

இவ்வாறு ஆன்மவை பக்குவப்படுத்துவதும் இறைவன் செயலே. என்று கூறுகிறார் திருமூலர்.

**குருவின் துணைகோடல்**

ஆன்மீகப் பாதையில் அழைத்துச் செல்ல வல்லவர்கள். கல்வி, கேள்வி, பக்தி, ஞானத்தால் உயர்ந்த சான்றோராவர். அவர்களை நாம் துணைச் கொண்டால் துன்பங்கள் விலகும். மெய்நூலறிவுடையவர்கள் சிவபெருமான் அருளைப் பெற்று உலகம் உள்ளவரையிலும் வாழ்வர். ஆகவே பெரியாருள்ளம் மிகப்பெரியாரைத் துணைக் கொள்ளுதல் பெரும் பயன் தரத்தக்கது என்று வலிவுறுத்துகிறார் திருமூலர், இதனை,

**அருமைவல்லோன்கலை ஞானத்துள் தோன்றும்**
**பெருமைவல்லோன் பிற விச்சுழி நீந்தும்**
**உரிமைவல்லோன் உணர்ந்து ஊசி இருக்கும்**

**திருமைவல் லாரோடு சேர்ந்தனன் யானே**[3]

என்று விளக்குகின்றார் திருமூலர். இதனை வள்ளுவரும்,

**அரியவற்று ளோல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணித் தமராக் கொளல்**[4]

என்று குறிப்பிடுகின்றார். ஆன்மீகப் பாதையில் செல்ல மெய்ஞான அறிவுடைய பெரியோர் துணை வேண்டும். என்பதைப் பல பாடல்களில் திருமூலர் விளக்குகின்றார்.

**ஈகை உள்ளம்**

ஒருவர் தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்கும் பயன்படச் செய்வதே தானமும், தருமமும் ஆகிய இருநிலைகள் ஆகும். தமிழில் இவை கொடை, ஈகை தாழ்ந்தானத்துள் அடக்கியே கூறுகிறார். தானச் சிறப்பு மனிதநேய மாண்புகளில் ஒன்று கொடுக்குங்காலத்து பெறுவர் எத்தகையவர் எனத் தகுதி வேறுபாடுகளை ஆராயாது எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். உண்ணுங்காலத்துக் கூட விருந்தினரை எதிர்நோக்கி அவருடன் அமர்ந்து உண்ணுதல் என்கிறார். பொருளைப் பூதம் போல்வறிதே காத்திராது சுற்றத்தார்க்கும் மற்றையோர்க்கும் உதவுதல் வேண்டும் என்கிறார். திருமூலர்.

**ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்**

**பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்**

**வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்**

**காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே**[5]

அறத்தை விரும்பிச் செய்தல் அறிவுடையோர்கே உரியது என்று திருமூலர் அதன் வகைகளையும் விளக்குகிறார்.

பிறர்க்கு பிற உயிர்கட்கும் உதவுதல், தத்துவ உணர்வு பெறுதல் முதலியன அறத்தின் வகைகளாகும். அறம் செய்தலே ஆன்மீக வாழ்வின் சிறப்பாகும். அறம் செய்தற்கு நிறைய செல்வங்கள் வேண்டா. மனம் நிறைவுற்றிருந்தால் போதுமான உண்ணுங் காலத்து இறைவற்கொரு பச்சிலை சூட்டிவறியார்க்கும் சிறிது உணவிடுதல், உணவிடுங்கால் இன்சொல் பேசுதல் எனும் அறச் சிந்தனைகளும். செயல்களும் போதுமானது. அறநெறி சிவநெறிக்கு இன்றியமையா உறுப்பாகும். அறம் செய்வது சிவபெருமான் திருவுளத்திற்கு விருப்பமுடையதாகும் என்கிறார். திருமூலர் அதனால் அறத்தைச் செய்யாது நிகழ்த்தும் பிற செயல்கள் அவனுக்குரிய வழிபாடாகும் எனக் கருதுதல் மாந்தரது அறியிமையே ஆகும். பலவகை நோய்களும், இடை இறப்பு ஆகிய துன்பங்கள் இம்மையில் அறஞ்செய்யாதாரித்தே சேரும். அறஞ்செய்யாதவரிடம் அவை நெருங்காது அறஞ்செய்தலைத் திருமூலர்.

**இருமலும் சோகையும் ஈளையும் வெப்பம்**

**தருமம் செய்யாதவர் தம்பாலது ஆகும்**

**உரும், இடி, நாகம், உரோணி, கழலை**

**தருமம் செய்வார்ப்பக்கல் தாழகிலாவே** **(திருமந்.பா.263)**

என்று கூறுகின்றார்.

**ஞானம்**

அறியாமையை நீக்கி அகஒளியை தருவது கல்வியே. அகத்திற்கண்கொண்டு பார்க்கும் அற்புதத்தைத் தருவது கல்வியே. ஆன்மீக வாழ்வின் வழித்தடத்தை உணர்த்துவது கல்வி. வெறும் நூலறிவால் உலகியலறிவு பெருகும். ஆகையால் அருளுக அறிவு பெறுவதற்கு மெய்ம்மை நூற்கல்வியே பயன்பாடாகும். ஒழுக்கத்திற்கும் பண்டிற்கும் ஏதுவாக அமைவது கல்வி. கல்வி தன்னை உடையார்க்கன்றி மற்றேயோர்க்கும் பயன் தரும். திருமந்திரம் ஆன்மீகத்திற்குப் பற்றுக்கோடான மெய்ந்நூலைக் கற்பவர்களே ஆன்மலாபத்தை பெறமுடியும் என்கிறது. எத்தனை நூல்களை நாம் கற்றாலும் மெய்ப்பொருளை அறிய மெய்நூல்களையேக் கற்க வேண்டும். சூரியனின் கதிர்கள் அனைத்து இடங்களிலும் பரவி இருந்தாலும். சூர்யகாந்தக்கல் மூலம் தான் தீயைப் பெறமுடியும் என்று மிக அழுத்தமாக திருமூலர் கூறுகின்றார்.

**ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும்**
**தோய்ந்த நெருப்பு அது தூய்மணி சிந்திடும்**
**ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு**
**வாய்ந்த மனம்மல்கு நூலேணி யாமே[6]**

என்று கல்லாமையால் எதனையும் பெறுதல் இயலாததாகும் என்கிறார். இதே போன்று கற்றவர், கல்லாதவர் நிலையை திருக்குறள் கூறுகின்றது.

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி[7]**

கற்க வேண்டியவற்றைக் கற்று முறைகாக மெய்ப்பொருளை உணர்ந்தவர். மீண்டு பிறவாநிலை எய்துவர் என்று வள்ளுவர் கூறுகின்றார். மேற்கண்ட கருத்துக்களின் வழி கல்வி மூலம் இறைவனை வேண்டியதால் முக்கியத்துவத்தை அறியலாம். மேலும் ஞானம் பெற்ற ஆன்மா இறைவனை அடைந்து பேராடைந்தம் கொள்ளும் நிலையினை அடைகிறது. ஞானக்குறைவுடைவை அதன் முயற்சியில் செய்தது ஈடுபடுகள் கொண்டிருக்கும். இறைவனை அடையச் சிறந்த வழி தன்னை அறிதல் என்னும் தவம் மேற்கொள்லல்.இத்தவத்தினால் தானியார் என்ற சிந்தனையும். நமக்கு மேலே மிகப்பெரிய ஆற்றல் (கடவுள்) உண்டென உணர்ந்து, அதனை நோக்கி மனதை செலுத்துதல் தவமாகும்.

**தவம்**

நாம் வெறும் கடமைக்கென நூல்களை ஓதாமல், பேரரசனும், காலச்சுவட்டில் அழியாமல் தவம் மேற்கொண்டு அழியாது அமரவாழ்வு பெற்றதைக் கருத்திற் கொண்டு தவம் மேற்கொள்ளுவது சிரந்தது என்பதனை,

**அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்**
**பகைத்து எழும் பூசலும் பட்டார் நடுவே**
**அமைத்த்தோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி**
**இமைத்து அழியாது இருந்தார் தவத்தாரே[8]**

திருமந்திரம் உணர்த்துகின்றது.

**தனிமனித நெறிகள்**

திருமூலர் ஒழுக்க நெறியை வற்புறுத்துகிறார். வழிபாடு சிறந்த ஓர் ஒழுக்கமாதலின், அதனை செய்பவர்கள் பிற ஒழுக்கங்களைச் கடைப்பிடித்தல் மிகமிக அவசியமாகும். நல்லொழுக்கம் தலை நிற்பார் வழிபாடே உரிய பயனைத்தருவது. பிரன்மனை நோக்கா பேராண்மையாளர், புலனடக்கம் உள்ளவர்களாகிய இவர்களது நிவேதனம், தோத்திரம், வணக்கம், செபம், ஓமம், யாவும் வழிபாட்டிற்குரியன. அவ்விடத்தில் காற்றும் தூய்மையாய் இருக்கும். என்பதனை,

**நண்ணும் பிரதார நீத்தா ரவித்தார்**
**மண்ணிய நைவேத்தியமன சந்தான**
**நுண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னும்**
**மன்னு மனபவ னத்தோடு வைகுமே**[9]

என்று கூறுகின்றார் திருமூலர். இறைவனி வழிபாட்டால் பசுஞானம் நீக்கிப் பதி ஞானம் கிட்டும் என்கிறார் திருமூலர்.

**ஆன்மாவும் உடலும்**

கடல் சூழ்ந்த இவ்வுலகமும் பரந்து விரிந்து கிடக்கும் ஆகாய வெளியும், அறுபத்து நான்கு கலைகளும், இலிங்க உருவமே, ஆகவே சீவனாகிய உயிர் இருக்குமிடமே சிவலிங்கம் எனத் திருமூலர்,

**மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்**
**மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்**
**மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே**[10]

என்று மனிதனின் உடலை சிதம்பரமாகவும் சதாசிவமாகவும் குறிப்பிடுகிறார். பாடலின் விளக்கத்தினை கூடுதலாக சேர்க்கவும்.

**நிலையாமையும் வாய்மையும்**

வாய்மையைப் பற்றி கூறும் போது வாய்மை என்பது முடிந்த முடிவான உண்மையாகும். பிறவிகளில் எய்துதற்கரியது மானுடப்பிறவி, இதுவும் நிலையில்லாதது. இதனை நன்கு உணர்ந்த மாந்தர்கள் சிவபெருமான் வகுத்தளித்த உலகியல், அருளியல் இரண்டிலும் வாய்மையைக் கடைப்பித்து ஒழுகுதல் வேண்டும். அந்த செயல்பாடுதான் மாந்தர்கள் பயனடைதற்கு ஏற்ற நெறியாகும். இறைவனும் அவ்வாறு செய்வார்க்கே அன்பு செய்வன். இக்கருத்தினை திருமூலர்,

**எய்திய காலத்து இருபொழுதும் சிவன்**
**மெய் செயின்மேலை வழி அதுபொய் நிற்கும்**
**பொய்யும் புலறும் புகலொன்று நீத்திடில்**
**ஐயனும் அவ்வழி ஆகி நின்றானே** [11]

என்றா பாடலின் வழி விளக்குகிறார். மேலும் பொய்ம்மைக்குக் காரணம் ஐம்புல விருப்பமேயாகும். இதனை,

**பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்கடை முடியார்க் கன்பர்**
**மெய்யடியார் கட்கான பணிசெய்யும் விருப்பில் நின்றார்**
**வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்**
**சைவ மெய்த்திருவின் சார்வே பொருளைச் சாருநீரார்**[12]

என்ற திருத்தொண்டர் தொகை நூலும் குறிப்பிடுகின்றது.

உடம்பு நிலையாமையைப் பற்றி தெளிவாக கூறிய திருமூலர் உடம்புடன் தொடர்புடைய செல்வ நிலையாமையைக் கூறுகின்றார். செல்வத்தால் செருக்கும் மயக்கமும் ஏற்படுகின்றது. ஆகையால் இறைவனை காண முடியவில்லை. இந்தச் செல்வம் உடம்பு உள்ளனவும் கூட ஒருவற்குத் துணையாக வருவதில்லை. செல்வத்தை நாம் தேடி, பாதுகாத்து வைத்தாலும் அது நம்மை விட்டு நீங்குவது என்பது உறுதி. உடம்புடன் பிறந்த உயிர் உடம்பில் எப்போதும் நின்று அதனைக் காவாது இடையே விட்டொழிகின்றது. இடையில் வந்த செல்வமானது நம்மை காக்கும் என நினைப்பது மூடத்தனம் ஆகும். தேனி தான் சேகரித்த தேனை வேடன் எவ்வாறு வலிய தேனீக்களை விரட்டிக் கைக்கொள்வதனைப்போல் வலிய தேடிய செல்வத்தைத்தானும் அனுபவிக்காது. பிறர்க்கும் தராமல், வலிமையுடையோர் துன்புறுத்தி எடுத்துச்செல்வர். எனவே செல்வத்தை சேகரிப்பதை தவிர்த்து இறைவனை வழிப்பட்டால் அவன் அருள் செல்வத்தை வழங்கிப் பேரின்பத்தால் திறைக்கச் செய்வன் என்பது உறுதி.

**ஈட்டிய தேன்பூ மணக்கண்டு இரதமும்**
**சூட்டிய கொணர்ந்து ஒரு கொம்பிடை வைத்துவிடும்**
**ஓட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே**[13]

எனத் திருமந்திரமும்.

**உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்**
**கெடாஅத நல்லறமு செய்யார் கொடா அது**
**தைத்தீட்டி னார் இழப்பர் வாந்தோய்மலை நாட**
**உய்த்தீட்டும் தேனீக் கரி**[14]

என்று நாலடியரும், செல்வத்தின் நிலையமையை உணர்த்துகின்றன. உடல்பொடு உயிர் உள்ள போதே அறவாழ்வை மேற்கொண்டு இறைவனின் அருளை நாடுங்கள் என்பதன் வழி செல்வம் நிலையற்றது என்பதனை உணர்த்துகின்றது.

**இறைவனைச் சரணமைதல்**

பக்தி என்பது, பாதை மாறிய கன்று தாய்ப்பசுவை எண்ணியுருகி அம்மாவென அழைக்க பசு ஓடி வந்து கன்றை அணைக்கும். இது போல தாய்ப்பசுவாம் இறைவனை எண்ணியுருகிக் கதறி அழைத்தல் அக்கணமே வந்து அவனும் அருள்புரிவான். அழு, அருதால், அவனைப் பெறலாம் எனப் பக்தியின் ஆழத்தையும் அதன் நுட்பத்தையும் திருமூலர் அழகொழக விளக்குகிறார்.

**ஆன்கன்று தேடி அழைக்கும் அதுபோல்**
**நான்கன்றாய் நாடி அழைத்தேன் என்றாதனை**

**ஊன் கன்றுக்கு அப்பாலாய் நின்ற மறைபொருள்**
**ஊன் கன்றால் நாடிவந்து உள்புகுந்தானே**[15]

பாடல் அடி சுட்டுகிறது.

**முடிவுரை**

திருமூலர் கூறும் ஆன்மீகக் கருத்துங்கள் யாவும் தக்க சான்றுகளுடனும், எடுத்துக்காட்டுடனும். காண முடிகின்றது. உலகப் பற்றுக்களில் இருந்து விலகி, ஆன்மீக நெறியைப் பின்பற்றுவதன் மூலமாக மனித உயிர்கள் மீண்டும் பிறவாநிலையை அடைந்து உயர்நிலையாம் இறைநிலையை அடைய முடியும் என்பதனை திருமூலர் விளக்குகின்றார்.

**மேற்கோள் நூல்கள்**

1. **திருமந். பா** - 270
2. திருநாவுக்கரசர் தேவாரம் பா.2
3. **திருமந். பா.**548
4. குறள்-443
5. **திருமந். பா.** 250
6. **திருமந். பா.** 269
7. **குறள். 356**
8. **திருமந். பா** 1630
9. **திருமந்.பா.**1007
10. **திருமந். பா. 1726**
11. **திருமந். பா.2602**
12. பெரியபுராணம்-361
13. **திருமந். பா.171**
14. **நாலடி.பா.11**
15. **திருமந்.பா. 2627**